[8th August 1966

THE HON SRI V. RAMAIAH : (a) There is no proposal at present to lift control over the foodgrains, and

(b) Does not arise.

திரு. கரு. சீமைச்சாமி : சார், தமிழ்நாட்டிலே உணவுப் பற்றுக் குறை இல்லை என்று முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். பற்றுக்குறை இல்லாதபோது இந்தக் கட்டுப்பாடு எதற்கு? இந்தக் கட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : பற்றுக்குறை இல்லை என்று சொல்வது அரிசியைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்குத்தன்னிறைவு உள்ள மாநிலமாக இருக்கலாம். ஆனால், இந்திய நாட்டின் ஒரு பாகமாக நம்முடைய மாநிலம் இருக்கின்ற காரணத்தாலே இந்தியாவின் சூழ்நிலைக்குத் தகுந்தவாறுதான் பல நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கிறது.

சோதனைச் சாவடிகள்

*220 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966 ஏப்ரல் மாதத்திலிருந்து எந்தெந்த மாவட்டங்களில் கொள்முதல் செக்போஸ்ட்டுகளை எடுத்துவிட முடிவு செய்யப் பட்டுள்ளது?

கனம் திரு. வெ. ராமைய்யா : சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களில்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களிலும் ஏன் அதை எடுத்துவிட முடிவு செய்யவில்லை? சேலம், கோயம்புத்தூர் போன்ற இடங்களில் மட்டும்தான் எடுக்க வேண்டுமா? மற்ற மாவட்டங்களிலும் எடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் குறிப்பிட்ட மாவட்டங்களில் பருவ நிலை சரியில்லாமல், உற்பத்தியே பாதிக்கப்பட்டிருந்தது. தீவிரக் கொள்முதல் செய்வதற்கு பொருத்தமாக இல்லாததால் அங்கே தீவிரக் கொள்முதல் இல்லை. மற்ற மாவட்டங்களில் தீவிரக் கொள்முதல் ஒரு கட்டத்தில் நடந்தது. தீவிரக் கொள்முதல் நடத்தப்பட்டு தொடர்ந்து இப்பொழுது கொள்முதல் வேலை நடந்து வருகிறது.

திரு. சா. கணேசன் : இந்த செக்போஸ்ட்கள் பெரும்பாலும் உணவுப் போக்குவரத்தைத் தடைசெய்யாமல் அதை மீறுவதற்கும் ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்குமே உதவியாக இருக்கின்றன என்பது பகிரங்கமான விஷயம். ஆகவே, அதை எடுத்து விடுவதன் மூலம் ஒழுக்க ஈனங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யுமா இவ்வரசு என்று அறிய விரும்புகிறேன்.

8th August 1966]

கனம் திரு. வெ. ராமையா : செக்போஸ்ட்களைப் பொறுத்த வரையில் தொடர்ந்து பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய மாதிரி ஒழுங்கினமாக நடக்க வேண்டு மென்று எண்ணுகிறவர்கள் எந்தவிதமான கட்டுப்பாடு வைத்தாலும் கூட அதை மீறுவதற்குத்தான் முயற்சிப்பார்கள். ஆகவே, அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். செக்போஸ்ட்களை அமைப்பதால் நான் தெரிந்து கொண்டவரையில் தாராளமாய் உணவுத் தானியம் போவது தடைபடுகிறது. அதனால் இந்த ராஜ்யத்திற்கு லாபமாக இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த செக்போஸ்ட்களினால் நிறையப் பேர்கள் சம்பாதிக்கிறார்கள். இதிலே நிறை லஞ்சம் இருக்கிறது. இந்த செக்போஸ்ட்கள் நிறைய இருக்கின்றன. சென்னைக்கு வரும் வழியில் 5, 6 செக்போஸ்ட்கள் இருக்கின்றன. ஆகவே, அப்படி யில்லாமல் ஒரு செக்போஸ்ட் வைப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : 5, 6 செக் போஸ்ட்கள் வைத்தே திருட்டுத் தனமாகக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது ஒரு செக் போஸ்ட் மட்டும் இருந்தால் அவர்களுக்கு இன்னும் சுலபமாக இருக்கும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த உணவுத் தானியங்களை மாவட்டத்திற்கு மாவட்டம் தான் கொண்டு செல்லக்கூடாது என்று எஸன்ஷியல் கமாடிட்டீஸ் ஸப்ளைஸ் ஆக்ட் படி அமல் நடத்தப்பட வேண்டும். ஆனால், தாலுகாவிற்குத் தாலுகா கூட, பிர்க்காவிற்கு பிர்க்காகூட கொண்டு செல்லமுடியாத அளவுக்கு செக்போஸ்ட்கள் போடுகிறார்கள். ஆகவே, ஒரு ஜில்லாவிற்குள்ளேயே கொண்டு போவதற்கு தடையில்லாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமையா : இது அங்கங்கே இருக்கக்கூடிய மாவட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயம். ஆனால், எந்த எந்த மாவட்டங்களில் உணவு நெருக்கடியோ அல்லது தீவிரக் கொள்முதலோ இருக்கிறதோ அங்கேயெல்லாம் இண்ட்ரா-டிஸ்ட்ரிக்ட் மூவ்மெண்ட்டுக்குக்கூடத் தடை வைத்திருக்கிறார்கள்.

திரு. ஆ. தங்கவேலு : இரண்டு ஜில்லாக்கள் சேரும் எல்லையாக இருந்தால் அங்கே இரண்டு செக்போஸ்ட்டுகள் போடவேண்டிய அவசியம் இல்லை. ஒரு செக்போஸ்ட் போட்டால் போதாதா ?

கனம் திரு. வெ. ராமையா : இதையும் தொடர்ந்து அதிகாரிகள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

உணவுப் பங்கீட்டு அலுவலகம், மயிலாப்பூர்

*221 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூரில் உணவு பங்கீட்டு அலுவலகம் துவக்கப்பட்டபோது இருந்த கட்டடத்துக்குக் கொடுக்கப்பட்ட வாடகை என்ன ?